# சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் இலக்கணம் கற்பித்தல்: ஆசிரியர்களை மையமாகக் கொண்ட ஆய்வு

**Paunanthie, A* & Rasanayagam, J**

**ஆய்வுச் சுருக்கம்**

தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி, உலகமயமாதலின் தாக்கம், மொழி பற்றிய ஆய்வுகள் போன்றன ஒவ்வொரு மொழியின் தனித் தன்மையிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இந்நிலை ஒருமொழியின் இலக்கண வரம்புகளைப் பாதிக்கின்றன எனலாம். தமிழ் செம்மொழி என்ற தகுதியைப் பெற்றுள்ள நிலையில் அதன் இலக்கண இலக்கியங்களைக் கற்பதும் அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதும் மிக முக்கிமான விடயமாகும். இலக்கியம் கற்பித்தல், மொழித்திறன் கற்பித்தல் என்பவற்றோடு ஒப்பிடுகின்றபோது இலக்கணத்தைக் கற்பித்தல் என்பது இன்று முக்கிய சவாலாக அமைந்துள்ளது என்ற கருத்து கல்விப் புலம் சார்ந்தவர்களிடம் உண்டு. ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற இரு தரப்பினர் சார்ந்தும் இது நோக்கப்பட வேண்டியதாகும். இங்கு கற்பித்தல் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் தொடர்பாகவே இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வடமராட்சிக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட, சிரேஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இலக்கணம், தனியே அப்பகுதிக்கு விடையளிப்பதற்காக மட்டுமின்றி ஏனைய பகுதிகளுக்கு விடையளிக்கும்போதும் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, இலக்கணம் கற்பித்தல் தொடர்பாக ஆய்வு செய்யவேண்டிய தேவை எழுகின்றது. ஆரம்ப வகுப்புக்களில் இலக்கணம் கற்பித்தலில் காணப்படும் குறைபாடுகள், ஆசிரியர்களுக்கு இலக்கணம் அறிவு போதாமை, சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதற்கான வளவாளர்கள் போதாமை, வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகின்றமை, பாடப்புத்தகங்களில் இலக்கணப் பகுதியில் காணப்படும் பிழைகள் மற்றும் முரண்பாடுகள், பரீட்சை வினாத்தாள்களில் இலக்கணப் பகுதியில் வினாக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றமை, மரபிலக்கணத்திற்கும் புதிய இலக்கணத்திற்கும் இடையில் காணப்படும் முரண்பாடுகள், இலக்கணம் கற்பித்தலுக்காகப் புதிய கற்பித்தல் முறைகள் மற்றும் உத்திகள் கையாளப்படாமை போன்ற பல காரணங்களால் இச்சவால்கள் ஏற்படுகின்றன. இது அளவைநிலை ஆய்வாக முன்னெடுக்கப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வுப் பிரதேசத்தில் சிரேஸ்ட இடைநிலை வகுப்புக்களில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களிலிருந்து ஆய்வு மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் வினாக்கொத்து, அவதானிப்பு மற்றும் நேர்காணல் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டு, அவை ஒழுங்குபடுத்தப்பட்டு விவரணப் புள்ளிவிபரவியல் அடிப்படையில் அட்டவணைகள் மற்றும் வரைபுகள் மூலம் வியாக்கியானம் செய்யப்படுகின்றன.

**பிரதான சொற்கள்:** சிரேஷ்ட இடைநிலை வகுப்பு, இலக்கணம் கற்பித்தல், ஆசிரியர்கள்

---

To whom correspondence should be addressed: nanthie@gmail.com

*Kopay Teachers' College, Kopay, Srilanka.